1968, மே, 20 எனத் திகதியிடப்பட்ட தொழின்முறையியலறிஞனின் நிருபமும் 1968, மே, 31 எனத் திகதியிடப்பட்ட திரு சி. எச். விக்கிரமசிங்கா, தேயிலை சுவையாய்வோனின் கடிதமும் விவாதிக்கப்பட்டன.

தேயிலை ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவரும்வரை தேயிலை சுவையாய்வோனின் நியமனம் தள்ளிப்போடுவது என்னும் திரு பத்மநாதனின் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. உயிரினவிரசாயனப் பிரிவு உத்தியோகத்தர் தேயிலை சுவைப்பதில் பயிற்சி பெற்றுக்க வேண்டுமென திரு பத்மநாதன் வலியுறுத்தினர்.

திரு விக்கிரமசிங்காவின் ஒப்பந்தம் நீடிக்கப்பட்டிருந்தும் அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லையென அறிவிக்கப்பட்டது.

4. சபையினதும் குழுக்களினதும் உறுப்புரிமை

(அ) சபை

பின்வருவன அறிவிக்கப்பட்டன :—

(i) திரு ஜே. எப். ஏ. பீ. பிரிஸ் ஐக்கிய பிரித்தானியாவிற்குச் செல்லவிருப்பதால் 1968, மே, 15ம் திகதி தொடக்கம் ராஜினமாச் செய்துள்ளார்; தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்துவம் திருவாளர்கள் ஜோர்ஜ் ஸ்டுவட் அன் கம்பனியாரின் திரு எஸ். ஜி. சல்காடோவை நியமித்துள்ளது.
(ii) திரு ஏ. பி. பின்சர் ஐக்கிய பிரித்தானியாவிற்கு நெட்டோய்வில் செல்லவிருப்பதால் 1968, யூலை 1ம் திகதி தொடக்கம் ராஜினமாச் செய்துள்ளார், இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கம் ஹாலி—எல குவீன்ஸ்டவுன் குருப்பைச் சேர்ந்த திரு ஜே. ஆர். சொமவிலே நியமித்துள்ளது.

தலைவர் தாம் திரு சல்காடோவை யூன் 15ம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் வரவேற்றுள்ளாரெனக் கூறினர். திரு பின்சர், திரு பீரிஸ் ஆகியோருக்கு அவர்கள் சபைக்கு அளித்த சேவைக்கு நன்றிதெரிவித்தார்.

5 வங்கிக் கணக்குகள்

திரு எஸ். பத்மநாதன் முன்மொழிய, திரு எஸ். பி. வைத்திலிங்கம் வழிமொழிய பின்வரும் கணக்குகள் சம்பந்தமான காசோலைகள், ஏனைய வங்கி ஆவணங்கள் ஆகியனவற்றிலி 1968 யூலை 10ம் திகதி தொடக்கம் கலாநிதி எல். எச். பெர்ணன்டோ உதவி அதிபருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது :—

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம், தலவாக்கொல்லை

| | |
|---|---|
| நஷனல் அன் கிறின்லேஸ் வங்கி, | தேஆநி கணக்கு இல. T. 19340 |
| ,, ,, | சென்ற் கூம்ஸ் தோட்டம் க/கு இல. — S 06147 |
| ,, ,, | தேஆநி கனிட்ட உத்தியோகத்தர் வைத்திய நிதி |
| ,, ,, | தேஆநி உத்தியோகத்தர் சேம நிதி |

தேஆநி பசறை

| | |
|---|---|
| இலங்கை வங்கி, பதுளை | தேஆநி உப நிலையம், பசறை, தாபெத்த க/கு இல. 3558. |

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம், இரத்தினபுரி

| | |
|---|---|
| இலங்கை வங்கி, இரத்தினபுரி | தே.ஆ.நி. கீழ்ப் பிரதேச நிலையம் க/கு இல. 716 |
| ,, ,, | சென்ற் ஜோக்கிம் தோட்டம் க/கு இல. 724. |

6. 1968, ஏப்பிரல் 28, மே, 28 ஆகிய திகதிகளில் நடைபெற்ற நிருவாகக் குழுக்கூட்டத்தின் அறிக்கை

(அ) 1968, ஏப்பிரல் 28ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை.

பின்வரும் விடயங்கள் சம்பந்தமான நிருவாகக் குழுவின் சிபாரிசுகள் அங்கீகரிக்கப்பட்டன :—

(i) கலாநிதி ஆர். எல். விக்கிரமசிங்கா, உயரினவிரசாயனவறிஞன். கலாநிதி விக்கிரமசிங்காவை இரத்தினபுரிக்கு மாற்றுவதும் அவருக்கு வழங்கப்படவிருக்கும் வசதிகளும் (பக்கம் 4, 6, விடயம் 1 தொடக்கம் 15 வரை)

(iii) பக்கம் 5–6—உயிரினவிரசாயனப் (உற்பத்தி) பிரிவு. பரிசோதனைச்சாலை மாற்றங்கள், குளிரறைச் சாதனங்கள் முதலியனவற்றிற்கு குறைநிரப்பும் வாக்குப்பணமாகிய ரூ 72,000/– நிருவாகக்குழு இதை அங்கீகரித்துள்ளது. இதற்கான நிதியை எங்கிருந்து பெறலாமென்பதை கணக்காளர் அறிவிக்கவேண்டுமென வேண்டப்பட்டார்.

(ix) பக்கம் 9, விடயம் (r)—சென்ற் கூம்ஸ் வங்களா நிலைமை.

சென்ற் கூம்ஸ் காலியாக இருக்கும் மூன்று கனிட்ட உத்தியோகத்தர் வங்களாக்களை திருமணமான கனிட்ட உத்தியோகத்தர்களுக்கு (நிருவாகம்) வழங்கப்படும்.

(x) பக்கம் 10, விடயம் (S) திரு ஜே. ஏ. எச். றொலஸ்ட், பிரதி அதிபர்.

லீவிலிருக்கும் பொழுது சம்பளமும் வெளிநாட்டுகல்விப் படி வழங்கலும். இவரின் பொருட்கள் சம்பந்தமான கேள்வுக் கட்டணங்கள், விமானச் செலவு ஆகியவற்றிற்கான FEECS செலவை வழங்குவதற்குச் சபை அனுமதித்தது.

(xi) பக்கம் 11, விடயம் 4—கீழ்ப்பிரதேச நிலையம். கீழ்ப் பிர தேச பரிசோதனைச்சாலையையடுத்துள்ள காணியை எடுத் தல்.

திரு எஸ். எச். பி. சில்வாவின் காணி சம்பந்தமாக பொதுவான காணி எடுத்தல் நடைமுறையைக் கையாளுவது.

(xii) பக்கம் 12, விடயம் (ஈ) கீழ்ப்பிரதேச நிலையத்திற்கு டெனிஸ் விளையாட்டிடம்.

இதன் செலவுக்காக ரூ 2,200/- கொண்ட குறைநிரப்பும் வாக்குப் பணம்.

(xiii) பக்கம் 13, விடயம் 5 (ஆ)—சென்ற் ஜோக்கிம் தோட்டம்

நீர்பாய்ச்சும் கருவியை நிறுவுவதற்கான மேலதிக வேலைக்காக ரூ 2,200 – கொண்ட குறைநிரப்பும் வாக்குப்பணம்.

(ஆ) 1968, மே, 28 ம் திகதியன்று நடைபெற்ற கூட்டம்

திருத்தற் பத்திரம் 1968/74— A.27ல் உள்ள திருத்தங்களுக்க மைய மே 28ம் திகதியன்று நடைபெற்ற நிருவாகக் கூட்டத்தின் அறிக்கை திரு மிடில்டன் முன்மொழிய திரு எற்றியாராச்சி வழிமொழிய அங்கீ கரிக்கப்பட்டது.

7. 1968, பெப்பிரவரி 3ம் திகதி நடைபெற்ற தேஆநி உத்தியோ கத்தரின் சேம நிதி நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக் கூட்டத்தின் அறிக்கை.
விடயம் 3—பிரமாணம் 18ன் திருத்தம்

சேமநிதியிலிருந்து உத்தியோகத்தருக்கு வழங்கப்படும் கடனுத விக்கு வட்டி செலுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது; இலங்கை தோட்டத்துரைமார்கள் சேமநிதிச் சங்கம், இலங்கை தோட்ட உத்தி யோகத்தர் சேமநிதிச் சங்கம் ஆகியோரின் பிரமாணங்களை நிருவாகக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு செயலாளர் வேண்டப்பட்டார்.

மேலே கூறப்பட்ட தீர்மானத்திற்கமைய திரு ஜயமான முன்மொ ழிய, திரு டி. சொய்சா வழிமொழிய 1968, பெப்பிரவரி 3ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8. 1968, பெப்பிரவரி, 3ம் திகதி நடைபெற்ற கனிட்ட உத்தியோகத்தர் வைத்திய நிதி நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக் கூட்டத்தின் அறிக்கை

திரு ஜயமான முன்மொழிய திரு மிடில்டன் வழிமொழிய பெப்பிர வரி, 3ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டது.

9. 1968, மார்ச் 25, யூன் 11 ஆகிய திகதிகளில் நடைபெற்ற கட்டடக் குழுக் கூட்டத்தின் அறிக்கை
(அ) 1968 மார்ச், 25ம் திகதி நடைபெற்ற கூட்டம்

திரு ஜயமான முன்மொழிய திரு பத்மநாதன் வழிமொழிய 1968, மார்ச் 25ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டது.

(ஆ) 1968, யூன், 11ம் திகதியன்று நடைபெற்ற கூட்டம்

(i) பக்கம் 1, விடயம் 2—கென்ற் கூம்சில் உபதாபற் கந்தோர் அமைப்பதற்குக் கட்டடம்

ஒவ்வொரு மாதமும் ரூ 50/– வாடகைக்கு மூன்று அறைகளையும் வாடகைக்கு விடுவது எனச் சம்மதிக்கப்பட்டது. அறைகளுக்கு மாற்றங்கள் யாதேனும் செய்வதானால் தபால் அதிகாரிகளினது அல்லது உபதபால் அதிகாரியினது செலவிலேயே செய்ய வேண்டும்.

(ii) பக்கம் 3, விடயம் 4—கீழ்ப்பிரதேச நிலையத்திற்கு வங்களா

இருவங்களாக்களைக் கட்டுவதற்குப் போதிய நிதியில்லாமையினால் 1968ல் ஒரு வங்களாவைக் கட்டிமுடிக்குமாறு திரு லோஸ் கூறினர். இரு வங்களாக்களைக் கட்டுவதற்கான மதிப்பிட்ட செலவு ரூ 66,000– ஆகும். இதற்குச் சபை சம்மதம் தெரிவித்தது.

மேற்கண்ட தீர்மானத்திற்கமைய திரு வருசவிதான முன்மொழிய திரு எற்றியாராச்சி வழிமொழிய யூன் 11ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10. வேறு விடயம்

(அ) தே.ஆ.நி. ஊழியர் சங்கம்

தே.ஆ.நி. உப உத்தியோகத்தர் சங்கம் தமது சங்கத்தின் பெயரை தே.ஆ.நி. ஊழியர் சங்கமென மாற்றிக் கொண்டதென அதிபருக்கு அறிவித்துள்ளனர் (பதிவு இல. T. V. 1407).

(இ) வெளிநாட்டு விவசாய ஆராய்ச்சித் திட்டம், அமெரிக்க விவசாயத் திணைக்களம்—

சிறுதுளைவண்டைக் கட்டுப்படுத்துவதற்கான உதவி

விவசாய, உணவு அமைச்சிற்கூடாக புதுடெல்லியிலுள்ள ஐக்கிய அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் வெளிநாட்டு விவசாய ஆராய்ச்சித் திட்டத்திடம் உதவி கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

(ஈ) திரு ஏ. ஆர். செபஸ்ரியம்பிள்ளை, ஆராய்ச்சி உதவியாளர், தாவர இனப்பெருக்கவியல்

திரு ஏ. ஆர். செபஸ்ரியம்பிள்ளை தனது பீஎச்.டி. படிப்பை முடிப்பதற்கு றெடிங் பல்கலைக்கழகம் செய்த சிபார்சை ஏற்று 1968 அக்டோபர் தொடக்கம் டிசெம்பர்வரை பயிற்சிக் காலத்தை நீடிப்பதற்கு சபை அங்கீகாரம் வழங்கியது.

(ஊ) 1966ம் ஆண்டுக்கான சபையின் அறிக்கை

இவ்வறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(எ) அரசாங்கக் கணக்குக்குழு

1966ம் ஆண்டின் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள் சம்பந்தமாக தலைவர், பிரதான பரிபாலன உத்தியோகத்தர், கணக்காளர் ஆகியோரின் பிரதிநிதியாக திரு எஸ். பத்மநாதன் 3.5.68 அன்று அரசாங்கக் கணக்குக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்தார். அரசாங்கக் கணக்குக்குழுவின் தலைவர் 1966ம் ஆண்டுக்கான அறிக்கை சம்பந்தமாகவும் கணக்குப் பரிசோதகர்களின் சிபாரிசுகளில் நடவடிக்கை எடுத்ததையொட்டியும் திருப்தி தெரிவித்துள்ளாரென திரு பத்மநாதன் கூறினர்.

(ஏ) சபையின் முத்திரை

திரு வைத்திலிங்கம் முன்மொழிய திரு ஜயமான வழிமொழிய திருவாளர்கள் ஆர். கே. நத்தானியல், எஸ். சந்தனம், என். எம். அப்துல் கபார் ஆகியோரின் புலமைப் பரிசில் ஒப்பந்தத்தில் சபையின் முத்திரையைப் பதிவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

(ஐ) அரசாங்க பாஷை

அரசாங்க பாஷையை அமுலாக்குவதற்காக நிலையத்தை 1964 ஜனவரி 1ம் திகதிக்கு முன்னர் சேர்ந்தவர்கள் முன் சேர்ந்தவர்களென்றும் அத்திகதிக்குப் பின் சேர்ந்தவர்கள் புதிதாகச் சேர்ந்தவர்களென்னும் சபையின் சிபார்சை விவசாய, உனவு அமைச்சும் அரசாங்க பாஷை ஆணையாளரும் அங்கீகரித்துள்ளனர்.

(ஒ) ஆராய்ச்சி நிலையங்கள்

திரு பின்சருக்குப் பதிலளிக்கையில் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலுள்ள ஆராய்ச்சி நிலையங்கள் விவசாயம் சம்பந்தமான விடயங்களில் கலந்தாலோசிக்கலாமெனவும், ஆயினும், விவசாய, உணவு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டுமெனவும் திரு வருசவிதான கூறினர்.

(ஓ) கலாநிதி இ. எம். செனறி

கலாநிதி செனறி சொந்தக் காரணங்களுக்காக ராஜினமாச் செய்துள்ளாரெனத் தலைவர் கூறினர். அவர் நிலையத்தில் மூன்று வருட காலம் சேவைபுரிந்தாலும் தேயிலை கைத்தொழிலிற்கு அதிக சேவைசெய்துள்ளார். அவரின் ஒப்பந்தம் முடிவடையமுன் அவர் நிலையத்திலிருந்து விலகிக்கொள்வது கவலைக்கிடமாக இருந்த போதிலும் அவர் தொடங்கிய ஆராய்ச்சி வேலைகள் தொடர்ந்து நடைபெறுமெனவும் காலக்கிரமத்தில் இவ்வேலைகளின் அபிவிருத்தியைப் பற்றி அவர் அறிவாரெனவும் தலைவர் மேலும் கூறினர். கலாநிதி செனறிக்கும் திருமதி செனறிக்கும் அவர்களின் எதிர்காலத்தை முன்னிட்டு நல்லாசிகள் வழங்கப்பட்டன.

திரு வருசவிதான பின்வருமாறு உரையாற்றினர் :—

''தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் சார்பில் தலைவர் கூறிய நல்லாசிகளை ஆதரிக்கிறேன். நானும் ஒரு தோட்டத்துரை என்னும் முகாதவில் கலாநிதி செனறி அவர்கள் தேயிலை சம்பந்தமாக நிணல், நைதரசன் பிரயோகம் முதலிய புதிய கொள்கைகளை புகுத்தியதை நன்கறிவேன். தேயிலை உற்பத்தித்துறையில் பாய்பொருள் உலர்த்தி, தேயிலையின்—தரத்தை உயர்த்துதல், உடன்கரையும் தேயிலை ஆகிய விடயங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை தொடக்கிவைத்ததற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். இத்திட்டங்கள் சித்திகரமாக முடிவடையுமென ஏதிர்பார்க்கிறேன்; இவ்வாறு முடிவடையும் காலத்தில் கலாநிதி செனறி தன்து குறுகிய காலத்தில் இலங்கை தேயிலைக் கைத்தொழிலிற்கு ஆற்றிய பணிக்கு நாமெல்லோரும் நன்றியுடையவர்களாகவிருப்போம்.''

கலாநிதி செனறி தலைவருக்கும், திரு வருசவிதானவிற்கும் சபைக்கும் நன்றி தெரிவித்தார்.

(i) ராஜினமாக்கள்

திரு பி. பி. ஜோன்ஸ், சுருக்குத் தட்டெழுத்தாளர்/தட்டச்சாளர்/எழுது வினைஞர் 31,3.68 தொடக்கம்.
திரு ஜி. தி. கருணசேன, பரிசோதனைச்சாலை பணிப்பாளர், தாவர நோயியல் பிரிவு, 31.3.68 தொடக்கம்.

திரு டபிள்யு. ஆர். எப். றொட்றிகோ, நுண்தொழில் உதவியாளர், தாவர நோயியல் பிரிவு 28.5.68 தொடக்கம்.
திரு எம். சிக்குராஜபதி, நுண்தொழில் உதவியாளர், கமத் தொழில் இரசாயனவியல் பிரிவு, 30.5.68 தொடக்கம்.
திரு எச். பி. ஹெறத், நுண்தொழில் உதவியாளர், சிற்று யிரியல் பிரிவு, 15.6.68 தொடக்கம்.

(ii) இளைப்பாறல்

திரு ஏ. எச். பி. டயஸ், கணக்கு உதவியாளர், 31.3.68 தொடக்கம்.
திரு ஜே. ஏ. எச். றொலஸ்ட், பிரதி அதிபர், 6.6.68 தொடக்கம்.

கூட்டம் பி.ப. 12.30 மணிக்கு முடிவடைந்தது.

ஏ. சி. பெரேரா,
செயலாளர்.

## கொழும்பு, இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் டளிங்கு ஞாபகக் கூட்டத்தில் 1968, யூலை 22ம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்ற இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையச் சபையின் கூட்டத்தின் அறிக்கையின் சுருக்கம்

பங்குபற்றியவர்கள்—திருவாளர்கள் எப். அமரசூரியா (தலைவர்), பி. வருசவிதான, எஸ். கே. டி. ஜயமான, தி. சி. ஏ. டி. சொய்சா, எம். எஸ். பெரேரா, ஜி. டி. லோஸ், ஜே. எல். டி. பீரிஸ், டி. இ. எற்றி யாராச்சி, எஸ். பத்மநாதன், எஸ். பி. வைத்திலிங்கம், எம். இரா ஜேந்திரம், பி. ஜே. சீ. டறண்ட். எம். பி. ஹொஸ்வால், எஸ். ஜி. சல்காடோ, ஜே. ஆர். சொமவில், ஐ. எம். மக்கென்சி, கலாநிதி எல். எச். பெர்னுன்டோ (பதில் அதிபர்), திரு ஏ. சி. பெரேரா (செயலாளர்).

திரு சி. பி. சண்முகம் (தேயிலை கட்டுப்பாட்டதிகாரி) தாம் வரவிய லாமைக்கு வருத்தம் தெரிவித்தார்.

### 1. சபையின் உறுப்புரிமை

திரு ஜி. பி. மிடில்டன் ஐக்கிய பிரித்தானியாவிற்கு நெட்டோய் வில் சென்றுள்ளாரென்று தலைவர் கூறினர், இலங்கை தோட்டத்துரை மார்கள் சங்கம் தலவாக்கொல்லையிலுள்ள தலவாக்கொல்லைத் தோட்டத் தைச் சேர்ந்த திரு ஐ. எம். மக்கென்சியை 1968, யூலை, 12ம் திகதி தொடக்கம் நியமித்துள்ளது.

கட்டடக் குழுவில் திரு மிடில்டனுக்குப் பதிலாக திரு மக்கென்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைவர் திருவாளர்கள் ஜே. ஆர். சொமவில், ஐ. எம். மக்கென்சி ஆகியோரை வரவெற்ருர்.

தனக்கு அளித்த உதவிக்கு நன்றிதெரிவித்து 1968, யூலை, 9 எனத் திகதியிடப்பட்ட கலாநிதி இ. எம். செனறியின் கடிதமொன்று வாசிக்கப் பட்டது.

### 2. அதிபரின் நியமனம்

இவ்விடயமாக இறுதியானமுடிவென்றை எடுக்கமுன் அண்மையில் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தேயிலை வெத்தியல் ஆணைக்குழு வின் சிபார்சுகளை பரிசீலனைசெய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வறிக்கை அரசாங்க அச்சகத்தில் இருப்பதாகவும் விரைவில் வெளியிடப்படுமெனவும் எதிர்பாக்கப்படுகின்றது. இதனுல் சபை ஆகஸ்ட், 20 திகதி, செவ்வாய்க்கிழமை மீண்டும் அழைக்கப்படுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த அதிபர் பொதுவாக இலங்கையராகவே இருப்பாரெனச் சபை தீர்மானித்தது. அடுத்த சபைக் கூட்டத்தின் முன் வேலை நிபந்தனை களை விவாதிப்பதற்கு ஓர் நிருவாகக்குழுக்கூட்டம் அழைக்கப்படும்; இந்த வேலை நிபந்தனைகளை விவசாய உணவு அமைச்சு உறுதிப்படுத்த வேண்டும்.

சபையின் அடுத்த கூட்டத்தில் நிலையத்தின் நிருவாக அமைப்பை பரிசீலனைசெய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

### 3. வேறு விடயம்

கலாநிதி ஏ. எஸ். எல். திருமான உயிரினவிரசாயனவறிஞன் (சுவை ஆராய்ச்சி) ராஜினுமாச் செய்துள்ளாரென அறிவிக்கப்பட்டது.

ஏ. சி. பெரேரா,
செயலாளர்

## கொழும்பு, இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் டளிங்கு ஞாபகக் கூட்டத்தில் 1968, ஆகஸ்ட், 20ம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்ற இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையச் சபைக் கூட்டத்தின் அறிக்கையின் சுருக்கம்

பங்குபற்றியவர்கள்—திருவாளர்கள் எப். அமரசூரியா (தலைவர்), எம். எஸ். பெரேரா, ஜி. டி. லோஸ், பி. வருசவிதான, எஸ். கே. டி. ஜயமான, சி. பி. சண்முகம், தி. சி. ஏ. டி. சொய்சா, எஸ். பி. வைத்திலிங்கம், ஜே. ஆர். சொமவில், எஸ். ஜி. சல்காடோ, எஸ். பத்மநாதன், டி. இ. எற்றியாராச்சி, எம். இராஜேந்திரம், கலாநிதி எல். எச். பெர்னுன்டோ (பதில் அதிபர்), திரு ஏ. சி. பெரேரா (செயலாளர்).

திரு ஜி. ஏ. எஸ். குணசிங்கா (அதிபரின் செயலாளர்) ஆகியவரும் பங்குபற்றினர்.

திருவாளர்கள் ஜே. எல். டி. பீரிஸ், எம். பி. ஹொரஸ்வால், ஐ. எம். மக்கென்சி ஆகியோர் தாம் பங்குபற்றவியலாமைக்கு வருத்தம் தெரிவித்திருந்தனர்.

### 1. 1968, யூன் 26, யூலை 22 ஆகிய திகதிகளில் நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை

#### (அ) 26.6.68ல் நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை

திரு ஜே. ஆர். சொமவில் முன்மொழிய திரு தி. சி. ஏ. டி சொய்சா வழிமொழிய 29.7.68 எனத் திகதியிடப்பட்ட திருத்தப் பத்திரம் இல. 1968/89—B. 34ல் குறிப்பிட்ட திருத்தங்களுக்கமைய இவ்வறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

#### (ஆ) 22.7.68ல் நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை

திரு ஜே. ஆர். சொமவில் முன்மொழிய திரு தி. சி. ஏ. டி சொய்சா வழிமொழிய 13.8.68 எனத் திகதியிடப்பட்ட திருத்தப் பத்திரம் இல. 1968/101—B. 38ல் குறிப்பிட்ட திருத்தங்களுக்கமைய இவ்வறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### 2. அறிக்கை சம்பந்தமான விடயங்கள்

#### (அ) 22.6.68ல் நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை

(i) பக்கம் 5 விடயம் 6 (ii)—அக்கிரத்தன்னை உப நிலையம். இத் திட்டம் சம்பந்தமாக திருத்தப்பட்ட கொள்விலை முதலியன யாவற்றையும் ஒன்று சேர்ந்து சபைக்கு ஓர் நிருபத்தை சமர்ப்பிக்கு மாறு திரு லோஸ் அதிபரை வேண்டினர்.

#### (ஆ) 22.7.68ல் நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை

பக்கம் 1, விடயம் 2—அதிபர் கௌரவ விவசாய, உணவு அமைச்சர் தே.ஆ.நி. தலைவருக்கு அனுப்பிய கடிதமொன்று விவாதிக்கப்பட்டது. தே.ஆ.நி. சபையின் குழுவொன்று விவசாய, உணவு அமைச்சரை பேட்டி கண்டு அதிபரின் நியமனம், இப்பதவிக்கான சம்பளத்திட்டம் ஆகியன வற்றைக் கலந்தாலோசிக்கும்வரை அதிபரின் நியமனத்தைத் தள்ளிப் போடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

3. 1968, ஆகஸ்ட், 12ம் திகதி நடைபெற்ற நிருவாகக்குழுக் கூட்டத்தின் அறிக்கை

வரைவு அறிக்கையை நிருவாகக்குழு அங்கீகரிக்காதலால் ஆகஸ்ட், 12ம் திகதி நடைபெற்ற நிருவாகக் குழுக்கூட்டத்தின் அறிக்கையின் விவாதம் பின்போடப்பட்டது.

4. வேறு விடயம்

(1) நியமனங்களும் ராஜினாமாக்களும் :

(i) நியமனங்கள்

கலாநிதி எல். எச். பெர்ஞன்டோ, பதில் அதிபர் 11.7.68 தொடக்கம்.

திரு எஸ். ஜயரத்தினம், நுண்தொழில் உதவியாளர், தொழின்முறையியல் பிரிவு, 14.7.68 தொடக்கம்.

திரு ஆர். என். போபியாராச்சி, நுண்தொழில் உதவியாளர், தாவர நோயியல் பிரிவு, 1.8.68 தொடக்கம்.

திரு டபிள்யு. ஏ. பி. டி சில்வா, நுண்தொழில் உதவியாளர், உயிரினவிரசாயனப் பிரிவு (கீழ்ப் பிரதேசம்), 1.8.68 தொடக்கம்.

திரு கே. டி. பந்துலரத்ன, நுண்தொழில் உதவியாளர், சிற்றுயிரியல் பிரிவு, 1.8.68 தொடக்கம்.

திரு ஏ. பி. டி. விக்கிரமரத்ன, நுண்தொழில் உதவியாளர், கமத்தொழில் இரசாயனப்பிரிவு, 1.8.68 தொடக்கம்.

திரு வி. சிவானந்தராஜா, நுண்தொழில் உதவியாளர், நெமற்ரேடியல் பிரிவு, 1.8.68 தொடக்கம்.

(ii) ராஜினாமாக்கள்

கலாநிதி இ. எம். செனறி, அதிபர், 10.7.68 தொடக்கம்.

(2) மத்திய பிரதேச நிலையம்—அந்தானைத் தோட்டம்

திரு வைத்திலிங்கம் முன்மொழிய திரு எற்றியாராச்சி வழிமொழிய பின்வரும் விடயங்கள் தீர்மானிக்கப்பட்டன :

(அ) அந்தானை முதலீட்டுக்கம்பனி லிமிட்டட் ஆகியோரிடமிருந்து அந்தானை தோட்டத்தில் 56ஏ 0றூ 05பே விஸ்தீரணமுள்ள காணியை இருநூற்று எண்பத்தி ஆருயிரம் ரூபா (ரூ 268,000/-) தொகைக்குக்கு கொள்வனவு செய்வது; இக் கொள்வனவு சம்பந்தமாக விற்கும் கம்பனி சபையின் சார்பில் வழங்கும் அறுதியுறுதியில் பாவினை உரிமையை உறுதிப்படுத்தாது; சபை கொள்வனவு செய்த காணியிலுள்ள பாதைகளின் பாவினையுரிமை சம்பந்தமாக இக்கம்பனியுடன் வேருெரு ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ளவேண்டும்.

(ஆ) சபையின் மூன்று உறுப்பினர்களின் முன்னிலையில் சபைக்கும் அந்தானை முதலீட்டுக் கம்பனி லிமிட்டட் ஆகியோருக்குமிடையே முடித்துக்கொள்ளும் ஒப்பந்தத்தில் சபையின் முத்திரை பதியப்படும்.

ஏ. சி. பெரேரா,
செயலாளர்.

## கொழும்பு, இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் டளிக்கு ஞாபகக் கூடத்தில் 1968, அக்டோபர் 7ம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்ற இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையச் சபையின் கூட்டத்தின் அறிக்கையின் சுருக்கம்

பங்குபற்றியவர்கள்—திருவாளர்கள் எப். அமரசூரியா (தலைவர்), பி. வருசவிதான, ஐ. டி. லோஸ், ஜே. எல். டி. பீரிஸ், டி. இ. எற்றியாராச்சி, எஸ். பி. வைத்திலிங்கம், எஸ். பத்மநாதன், எம். பி. ஹொஸ்வால், ஜே. எப். ஏ. பி. பீரிஸ், எம். இராஜேந்திரம் ஜே. ஆர். சொமவில், ஐ. எம். மக்கென்சி, கலாநிதி எல். எச். பொர்ஞன்டோ (பதில் அதிபர்), திரு ஏ. சி. பெரேரா (செயலாளர்).

திரு எச். எஸ். குணவர்த்தன (கணக்காளர்), திரு ஜி. ஏ. எஸ். குணசிங்கா (அதிபரின் செயலாளர்).

1. 1968, ஆகஸ்ட், 20ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை

பின்வரும் திருத்தத்திற்கமைய திரு எஸ். பி. வைத்திலிங்கம் முன்மொழிய திரு எம். இராஜேந்திரம் வழிமொழிய இவ்வறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

2. அறிக்கை சம்பந்தமான விடயங்கள்

(அ) பக்கம் 1, விடயம் 2 (அ9ஐ)—அக்கிரத்தன்னை நிலையம்

அக்கிரத்தன்னை உப-நிலையக் குழுவில் பின்வருவோர் உறுப்புரிமை வகிக்க வேண்டுமென திரு சொமவில் பிரேரித்தார், அதாவது, ஊவா தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் தலைவர், ஊவா மாகாணத்தில் வசிக்கும் தே.ஆ.நி. சபை உறுப்பினர், பதுளை, பண்டாரவளையிலுள்ள இரு பரிசோதனை தோட்டக் குழு உறுப்பினர்கள், கமத்தொழில் ஆலோசகரும் அக்கிரத்தன்னை உப-நிலையத்தின் பொறுப்பான உத்தியோகத்தரும்; இந்த உத்தியோகத்தர் உப-குழுவின் செயலாளராகக் கடமையாற்றுவார்.

பரிசோதனை தோட்டக் குழு நிருகிளாக்கினதும் உப-குழுவினதும் விசாரணை அலுவல் நியதிகளை தீர்மானிக்கலாமென திரு லோஸ் கூறினார். சபையின் அடுத்த கூட்டத்தில் இத்தீர்மானம் ஆராயப்படும்.

அக்கிரத்தன்னை நிலையத்தின் பொறுப்பான உத்தியோகத்தர் :

அக்கிரத்தன்னையை பொறுப் பேற்பதற்கு சிரேட்ட அல்லது மத்திய உத்தியோகத்தர் யாபரும் கிடைக்கவில்லையென அதிபர் கூறினார். இந் நிலையத்தை பொறுப்பேற்பதற்கு ஓர் கனிட்ட உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார். சென்ற் கூம்சிலிருந்து ஆராய்ச்சியாளர்கள் இந் நிலையத்திற்கு ஒவ்வொரு வாரமும் விஜயம் செய்வார்கள்.

(ஆ) பக்கம் 7, விடயம் 2 (ஆ)—அதிபர்

விவசாய, உணவு அமைச்சு ஓர் நிரந்தர அதிபரை நியமிப்பதற்கு சம்மதித்துள்ளதென்றும் அதிபர் பின்வரும் சம்பளத் திட்டத்தில் நியமிக்கப்படுவாரெனவும் தலைவர் சபைக்கு அறிவித்தார்; மாதம் ரூ2000—50—2250, பஞ்சப்படி ரூ 181.50, களியாட்டுப்படி ரூ 425.

1968, அக்டோபர், 1ம் திகதி தொடக்கம் கலாநிதி எல். எச். பொர்ஞன்டோ தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் அதிபராக ஏகமனதாகச் சபையால் தெரிவுசெய்யப்பட்டார்.

கலாநிதி பெர்ஞன்டோவிற்கு அளிக்கப்படும் வேதனம் பற்றி நீண்ட நேர விவாதம் நடைபெற்றது; சில உறுப்பினர்கள் அமைச்சர் கூறிய சம்பளத்திட்டத்திற்கு அதிபருத்தி தெரிவித்தார்கள்.

சபையின் இந்தத் தீர்மானத்தை தலைவர் கலாநிதி பெர்ஞன்டோவிற்கு அறிவித்தார். கலாநிதி பொர்ஞன்டோ தன்னை அதிபராக நியமித்ததற்கு நன்றி தெரிவித்து தன்னால் இயன்றதைத்தான் செய்வாரென சபைக்கு உறுதிமொழி அளித்தார்.

(இ) பக்கம் 8, விடயம் 4 (2)—மத்திய-பிரதேச நிலையம் அந்தானை,

மத்திய-பிரதேச நிலையத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட காணியின் அறுதியுறுதி திருவாளர்கள் எப். ஜே. அன் ஜி. டி சேரம் ஆகியோரின் அலுவலகத்தில் அந்தானை முதலீட்டுக் கம்பனி லிமிட்டட் ஆகியோரால் 1968, ஆகஸ்ட், 26ம் திகதியன்று நிறை வேற்றப்பட்டதென அறிவிக்கப்பட்டது.

3. விசேட குழுவின் அறிக்கை

விசேட குழுவின் தலைவர் அறிக்கையிலுள்ள சிபாரிசுகளின் சுருக்கத்தை வாசித்தார். இச் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. விசேட குழுவின் அறிக்கை சபை உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படும்.

விசேட குழுவின் அறிக்கையிலுள்ள சிபாரிசுகளின் சுருக்கம் வருமாறு :—

1. ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் அவரின் கடமைகளை வரையறுத்து கடமை நிரல்கள் அளிக்கப்பட வேண்டும்.
2. சபையின் கூட்டங்கள் அடிக்கடி அழைக்கப்படவேண்டும், நிலையத்தின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டும் விதத்தில் நிலையத்தின் வெவ்வேறு வேலைகளை நன்கறிந்த உப குழுக்கள் நியமிக்கப்படவேண்டும்.
3. களஞ்சிய கொடுக்கல்வாங்கல்களை தகுந்த முறையில் பராமரிப்பதற்கு ஏற்பாடு. ஓர் தகமைபெற்ற கணக்காளர்களினதும் கணக்குப் பரிசோதகர்களினதும் உதவியை உடனடியாகப் பெற வேண்டும்.
4. வேலைப்பிரிவை மாற்றியமைக்கவேண்டும்; ''பராமரிப்புக்கும் சுகாதாரத்திற்கும்'' உபயோகிக்கப்படும் தொழிலாளர் கமத் தொழிலறிஞனின் மேற்பார்வையிலிருக்க வேண்டும்; எந்திரவியல் பகுதி தகைமைபெற்ற எந்திரவியலறிஞனின்மேற்பார்வையிலிருக்க வேண்டும். தகைமைபெற்ற எந்திரவியலறிஞனை நியமிக்கும் வரை எந்திரவியல்ப்பகுதி தொழின் முறையியலறிஞனின் மேற்பார்வையிலிருக்கவேண்டுமெனச் சிபாரிசு செய்கிறோம்.
5. உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பகுதி அதிபரினதும் சபையினதும் நேரடிப்பொறுப்பில் இயங்க வேண்டும்; இப் பகுதியை மத்திய தர உத்தியோகத்தராவது பொறுப் பேற்கவேண்டும்.
6. பிரதி அதிபர் தரத்திலாவது ஒருவரை நியமித்து நிருவாக அமைப்பை சீராக்கவேண்டும். இந்த உத்தியோகத்தர் சபையின் நிறைவேற்றும் செயலாளராகக் கடமையாற்றுவதுடன் பொது நிருவாகம், வரவு செலவுத்திட்டத்தை வகுத்தல், நிதி நிலைமையைக் கட்டுப்படுத்துதல் ஆகிய பொறுப்புக்களையும் ஏற்று நடத்த வேண்டும். இத் தரத்திற்கேற்ற உத்தியோகத்தரை உடனடியாகத் தெரிவுசெய்ய வேண்டுமென சிபாரிசு செய்கிறோம். இந்த உத்தியோகத்தர் இரண்டுவருட கால ஒப்பந்தத்தில் நியமிக்கப்பட வேண்டும்.

4. சபையினதும் குழுக்களினதும் உறுப்புரிமை

(அ) சபை

இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் முகவர்த்துவப் பிரதிநிதியாகிய திரு எஸ். ஜி. சல்காடோ 2.10.68 தொடக்கம் ராஜனுமாச் செய்ததைத் தொடர்ந்து திரு ஜே. எப். ஏ. பி. பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) பரிசோதனை தோட்டக்குழு

பின்வரும் விடயங்கள் அறிவிக்கப்பட்டன :—

(i) திரு ஆர். எல். ஹாவிக்குப் பதிலாக பதுளை, ஸ்பிறிங் வலியைச் சேர்ந்த திரு சி. எப். புரூக்–சிமித் 1.8.68 தொடக்கம் கடமையாற்றுகிறார்.

(ii) திரு ஏ. டி. ஸ்கொட்டிற்குப் பதிலாக ஹப்புத்தளை, ஹப்புத்தலைத் தோட்டத்தைச் சேர்ந்த திரு டி. ஆர். மக்றே 1.8.68 தொடக்கம் கடமையாற்றுகிறார்.

(iii) திரு தி. ஏ. மோயிக்குப் பதிலாக திரு எஸ். ஜீ. சல்காடோ 4.9.68 தொடக்கம் கடமையாற்றுகிறார்.

தலைவர் ராஜினுமாச் செய்துள்ள உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து புதிய உறுப்பினர்களை வரவேற்றார்.

5. 1968, ஆகஸ்ட் 12, செப்டெம்பர் 24 ஆகிய திகதிகளில் நடைபெற்ற நிருவாகக் குழுக் கூட்டத்தின் அறிக்கை.

திரு ஏ. சி. பெரேராவிடமிருந்து 1968, செப்டெம்பர், 24 எனத் திகதியிடப்பட்ட கடிதமொன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

திரு ஏ. சி. பெரேரா 1968, அக்டோபர் மாதம் இறுதி தொடக்கம் இளைப்பாறுவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. 1968, அக்டோபர், 16ம் திகதி தொடக்கம் திரு பி. கணபதிப்பிள்ளை, புள்ளிவிவரவறிஞன் திரு ஏ. சி. பெரேராவிற்காக பதில் பிரதான பரிபாலன உத்தியோகத்தராக, பிரதி அதிபர், நிருவாகத்தை நியமிக்கும்வரை கடமையாற்றுவார்.

பக்கம் 3, குளிரறை, உயிரின விரசாயனப் பிரிவு, கீழ்ப்பிரதேச நிலையம்

குளிரறைக்கு கொழும்பு கொமஷல் கம்பனியாரின் கேள்வியாகிய ரூ 41,210/–

பக்கம் 4, விடயம் 5 (அ) உயிரினவிரசாயனப் பிரிவு, சாடி நொதிக்கும் கருவி

இக்கருவியை கொள்வனவு செய்வதற்காக ரூ 120,000/– கொண்ட குறைநிரப்பும் வாக்குப்பணம்.

திரு எம். இராஜேந்திரம் முன்மொழிய, திரு டி. இ. எற்றியாராச்சி வழிமொழிய 1968, ஆகஸ்ட், 12ம் திகதி நடைபெற்ற நிருவாகக்குழுவின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(ii) 1968, செப்டெம்பர், 24ம் திகதி நடைபெற்ற கூட்டம்

பின்வரும் விடயங்களை சபை அங்கீகரித்தது :—

(அ) பக்கம் 1, விடயம் 2—வீட்டு வாடகைப் படி

சிரேட்ட, மத்திய உத்தியோகத்தருக்கு விடுதிச்சாலையொன்றை நிறுவுவது.

(ஆ) பக்கம் 1, விடயம் 3(ஐ) (ஆ)—விடுமுறைப்பயண ஆணைச் சீட்டு புதிதாகச் சேர்ந்தவர்களுக்கு விடுமுறைப்பயண ஆணைச் சீட்டு வழங்கப்படமாட்டாது.

(இ) பக்கம் 1, விடயம் 3 (ஐ) (இ)—படி

உத்தியோகத்தருக்கு வழங்கப்படும் படிகள் யாவும் மீளப் பார்வையிடப்படும்.

(ஈ) பக்கம் 3, விடயம் (6)—அரசாங்கக் கடனும் 1967ம் ஆண்டுக்கான தேயிலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு வழங்கவேண்டிய பணமும்

அரசாங்கக் கடனுக்காக 1967ம் வருடத்திற்கு வழங்கப்படவேண்டிய தவணைக்கட்டணமும் (ரூ 166,667) தேயிலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு செலுத்தவேண்டிய 1967ம் வருடத்திற்கான மீதியும் (ரூ 175,000).

(உ) பக்கம் 3, விடயம் (7)—வங்கிக் கணக்கு—கூடுதலாகக் கையொப்பமிடுபவர்

திரு பி. கணபதிப்பிள்ளை, புள்ளிவிவரவறிஞனை பின்வரும் கணக்குகள் சம்பந்தமான காசோலைகளில் அதிபர், பிரதான பரிபாலன உத்தியோகத்தர் அல்லது கணக்காளர் ஆகியோருடன் சேர்ந்து கையொப்பமிடுவதற்கு சபை அங்கீகாரம் வழங்கியது :—

நஷனல் அன் கிறின்லேஸ் வங்கி —தே. ஆ. நி. கணக்கு இல. T19340
,, ,, —சென்ற் கூம்ஸ் தோட்டக்கணக்கு இல. S06147
,, ,, —தே. ஆ. நி. கனிட்ட உத்தியோகத்தர் வைத்திய நிதி
,, ,, —தே. ஆ. நி. உத்தியோகத்தர் சேமநிதி

(ஊ) பக்கம் 4, விடயம் (ii) திரு ஜி. எஸ். முத்தெத்துவேகம, சென்ற் ஜோக்கிம் தோட்டத்துரை

திரு முத்தெத்துவேகமவிற்குப் பதிலாக ஓர் கமத்தொழிலறிஞனை உடனடியாக நியமிக்க வேண்டும் புதிதாக நியமிக்கப்பட்ட கமத்தொழிலறிஞனுக்கு பயிற்சியளிக்கும் காலத்தைப் பொறுத்து திரு முத்தெத்துவேகமவின் ஒப்பந்தத்தை 21.12.68 தொடக்கம் நீடிப்பது.

(எ) பக்கம் 4, விடயம் (iii)—உத்தியோகத்கர் மாற்றங்கள் (நிருவாகம்)

கீழ்ப்பிரதேச நிலையம், பிரதான எழுதுவினைஞர், சிரேட்ட கணக்கு எழுதுவினைஞர், தே. ஆ. நி., சென்ற் கூம்ஸ் ஆகிய தரம் I பதவிகளை நிலையத்தில் விளம்பரப்படுத்துவது; இதற்கான தகைமை பத்து வருடகால அனுபவமாகும்.

(ஏ) பக்கம் 4, விடயம் (4)—பொறுப்பான உத்தியோகத்தர், அக்கிரத்தன்னை உப-நிலையம்

அக்கிரத்தன்னை உப-நிலைய பொறுப்பான உத்தியோகத்தருக்கு நிலையப்படியாக மாதம் ரூ 100/- வழங்குவது.

(ஐ) பக்கம் 5, (5)—திரு பி. ஏ. ஜோன்

திரு பி. ஏ. ஜோனுக்கு 14.10.68 தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு திரும்பவும் வேலைகொடுப்பது.

(m) பக்கம் 5, விடயம் (9)—அட்டனுக்கு பல்மருத்துவப் பயணம்

அட்டனில் பல்மருத்துவ சிகிச்சைக்காக வாரத்தில் இரு பயணங்கள் அனுமதிக்கப்படும்.

(r), பக்கம் 2, விடயம் 3(எ)—ஊவாவில் நீர் வறட்சி

சபையின் அடுத்த கூட்டத்திற்குமுன் ஊவாவில் காணப்படும் நீர் வறட்சி சம்பந்தமான அறிக்கையொன்று உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென அதிபர் கூறினுர்.

திரு எஸ். பி. வைத்திலிங்கம் முன்மொழிய, திரு ஜே. ஆர். சொமவில் வழிமொழிய 1968, செப்டெம்பர் 24ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6. தேயிலை ஆணைக்குழுவின் அறிக்கை

1968, செப்டெம்பர், 7ம் திகதி நடைபெற்ற கட்டடக்குழுக் கூட்டத்தில் தேயிலை ஆணைக்குழுவின் அறிக்கையில் நிலையத்தின் பணம் தவருனமுறையில் செலவிடப்பட்டுள்ளதென்னும் குறிப்பையொட்டி திரு ஜே. எல். டி. பீரிஸ் ஆட்சேபனை தெரிவித்துள்ளாரென தலைவர் கூறினுர். அக் கூட்டத்தில் திரு பீரிஸ் தெரிவித்த ஆட்சேபனையை தாம் பூரணமாக ஆதரிப்பதாகத் தலைவர் மேலும் கூறினுர் (பக்கம் 4, விடயம் 7). அண்மைக்காலத்தில் நிலையத்தில் நடைபெற்ற பெருமளவு அபிவிருத்தியே இப்பொழுது காணப்படும் நிதி நிலைமைக்குக் காரணமாகும். சென்ற் கூம்சிலும் ஏனைய உப–நிலையங்களிலும் அமைக்கப்பட்ட கட்டடங்களின் பெறுமதி தற்பொழுது பன்மடங்கானது. இக்கட்டடங்களை நிலையத்தின் முதலீடாகக் கருதவேண்டும்; இவற்றில் செலவழித்த பணத்தை வீணுக விரயம்செய்த பணமாகக் கருதவியலாது.

திரு சொமவில் தலைவரின் கருத்துக்களை ஆதரித்துப் பேசுகையில் நிலயத்தில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியினுலேயே நிதி நிலைமை குறைந்துள்ளதென்ருர். இவ்விடயம் சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கத் தேவையில்லையெனத் தாம் கருதுவதாகக் கூறினுர்.

திரு ஜே. எல். டி. பீரிஸ் அறிக்கையின் இறுதிப் பந்தியில் (பக்கம் 128, தேயிலை ஆணைக்குழு அறிக்கை) தவருன விளக்கங்கள் தரப்பட்டுள்ளனவெனக் கூறினுர். பணம் தவருன முறையில் செலவிடப்படவில்லையென்றும் இக்கருத்தை அமைச்சருக்கு விளக்க வேண்டுமெனவும் கூறினுர். சபை பணத்தை தவருன முறையில் செலவிட்டுள்ளதென்பதற்கு நேர்மாருக இப்பணம் வெவ்வேறு அபிவிருத்தித் திட்டங்களிலும் உத்தியோகத்தரை நியமிப்பதிலுமே செலவிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் குறிப்பிட்டிருந்த நுண்தொழில் சம்பந்தமான விடயங்களை வேருெரு கூட்டத்தில் ஆராய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

7. 1968, செப்டெம்பர், 7ம் திகதி நடைபெற்ற கட்டடக்குழுக் கூட்டத்தின் அறிக்கை

(அ) பக்கம் 3, விடயம் 4—நூல்நிலையம்

கட்டடக்குழு நூல்நிலையத்தையும் அதிபரின் அலுவலகத்தையும் சிரேட்ட உத்தியோகத்தர் வங்களா இல. 1 விருந்து நிருவாகக் கட்டடத்திற்கும் நிருவாக உத்தியோகத்தரின் அலுவலகத்தை சிரேட்ட உத்தியோகத்தர் வங்களா இல. 1ற்கும் மாற்றுவதற்கு சிபாரிசு செய்துள்ளது; சபை இச்சிபாரிசுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

திரு ஜே. ஆர். சொமவில் முன்மொழிய, திரு ஜே. எப். ஏ. பீ. பீரிஸ் வழிமொழிய இவ்வறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8. 1968, செப்டெம்பர், 4ம் திகதி நடைபெற்ற பரிசோதனை தோட்டக் குழுவின் கூட்டத்தின் அறிக்கை

(அ) பக்கம் 1, விடயம் 5—சென்ற் கூம்ஸ், சென்ற் ஜோக்கிம் தோட்டங்கள்—1968ம் ஆண்டுக்கான குறைநிறப்பும் மதிப்பீடு

பின்வரும் குறைநிரப்பும் மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டன :—

(i) சென்ற் ஜோக்கிம் மதிப்பீடு : பத்திரம் 1968/102—E. 24ல் கொடுக்கப்பட்டுள்ள குறைநிரப்பும் மதிப்பீடு.

(ii) சென்ற் கூம்ஸ் தோட்டம் : பத்திரம் 1968/103— E. 25ல் கொடுக்கப்பட்டுள்ள குறை நிரப்பும் மதிப்பீடு.

திரு ஜே. ஆர். சொமவில் முன்மொழிய, திரு எஸ். பி. வைத்திலிங்கம் வழிமொழிய பரிசோதனை தோடட்க் குழுவின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10. வேறு விடயம்

(அ) பாய்பொருள் உலர்த்தி

1968, யூலை மாதம் வரை நடைபெற்ற வேலை சம்பந்தமான தொழின் முறையியலறிஞனின் அறிக்கை இல. 4 விவாதத்திற்கெடுக்கப்பட்டது.

(இ) கீழ்ப் பிரதேச நிலையம்

திரு எற்றியாராச்சிக்குப் பதிலளிக்கையில் தான் கீழ்ப்பிரதேச நிலையத்தை மேற்பார்வையிடுவதாக அதிபர் தெரிவித்தார். சென்ற் ஜோக்கிமிலுள்ள அடுத்த சிரைட்ட விஞ்ஞானி கலாநிதி ஆர். எல். விக்கிரமசிங்காவாகும். கலாநிதி விக்கிரமசிங்கா மிகமுக்கியமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதால் அவருக்கு அதிக பொறுப்பைக் கொடுக்கக் கூடாதவும் கலாநிதி பெர்னுன்டோ தொடர்ந்து கீழ்ப்பிரதேச நிலையத்தை மேற்பார்வையிடலாமெனவும் திரு பத்மநாதன் கூறினர்.

(உ) சபையின் முத்திரை

பின்வரும் ஆவணங்களில் சபையின் முத்திரை பதியப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டது :—

(i) 23.8.68 அன்று திரு ஆர். கே. நத்தானியலின் புலமைப் பரிசில் ஒப்பந்தம்

(ii) 24.9.68 அன்று திரு என். எம். அப்துல் கபாரின் புலமைப் பரிசில் ஒப்பந்தம்

(iii) 24.9.68 அன்று திரு எஸ். சந்தனத்தின் புலமைப்பரிசில் ஒப்பந்தம்

(ஊ) நியமனங்கள், புலமைப்பரிசில்கள், ராஜினுமாக்கள்

(i) நியமனங்கள்

(அ) திரு கே. சி. டபிள்யு. எம். ஏ. சந்திரசேகரா, பரிசோதனைச்சாலை பணிப்பாளர், தாவர நோயியல் பிரிவு, 1.9.68 தொடக்கம், சம்பளம் மாதம் ரூ 60/-.

(ஆ) திரு கே. டி. எல். நானயக்காரா, கணக்கு எழுதுவினைஞர், கீழ்ப் பிரதேச நிலையம், 18.9.68 தொடக்கம், சம்பளம் மாதம் ரூ 120/-.

(ii) ராஜினமா

திரு ஏ. நானயக்காரா, நூண்தொழில் உதவியாளர், 31.8.68 தொடக்கம்.

(iii) புலமைப் பரிசில் படிப்பில் வெளிநாடு சென்ருேர்.

(அ) திரு ஆர். கே. நத்தானியல், ஆராய்ச்சி உதவியாளர், கமத்தொழில் இரசாயனப் பிரிவு, தனது மேற்படிப்புப் பயிற்சிக்காக, கொழும்புத் திட்ட புலமைப்பரிசில் படிப்பில் 23.8.68 அன்று கனடா சென்றுள்ளார்.

(ஆ) திரு என். எம். அப்துல் கபார், ஆராய்ச்சி உதவியாளர், தொழின்முறையியற் பிரிவு, தனது மேற்படிப்புப் பயிற்சிக்காக, கொழும்புத்திட்ட புலமைப் பரிசில் படிப்பில் 26.9.68 அன்று ஐக்கிய பிரித்தானியா சென்றுள்ளார்.

(இ) திரு எஸ். சந்தனம், ஆராய்ச்சி உதவியாளர், கமத்தொழில் இரசாயனப் பிரிவு, தனது மேற்படிப்புப் பயிற்சிக்காக, கொழும்புத்திட்ட புலமைப் பரிசில் படிப்பில் 29.9.68 அன்று ஐக்கிய பிரித்தானியா சென்றுள்ளார்.

(எ) திரு ஏ. சி. பெரேரா, பிரதான பரிபாலன உத்தியோகத்தர்

தலைவர், இம்மாத இறுதியில் இளைப்பாறவிருக்கும் திரு ஏ. சி. பெரேராவிற்கு அவர் கடந்த 37 வருடங்களாக நிலையத்திற்கு அளித்த சேவைக்கு சபையின் சார்பில் நன்றி தெரிவித்தார். திருவாளர் பெரேராவிற்கும் திருமதி பெரேராவிற்கும் சபையின் நல்லாசிகள் வழங்கப்பட்டன. உறுப்பினர்கள் கரகோஷம் செய்து நன்றி தெரிவித்தனர்.

திரு பெரேரா தலைவருக்கும் சபைக்கும் அவர்கள் கூறிய நல்லாசிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

ஏ. சி. பெரேரா,
செயலாளர்

## கொழும்பு, இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் டளிங்கு ஞாபக் கூடத்தில் 1968, நவம்பர், 25ம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்ற இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையச் சபையின் கூட்டத்தின் அறிக்கையின் சுருக்கம்

பங்குபற்றியவர்கள்—திருவாளர்கள் எப். அமரசூரியா (தலைவர்), பி. வருசவிதான, ஜி. டி. லோஸ், சி. பி. சண்முகம், எஸ். கே. டி. ஜயமான, எஸ். பி. வைத்திலிங்கம், ஜே. ஆர். சொமவில், ஜி. பி. மிடில்டன், பி. ஜே. சி. டறண்ட், ஜே. எப். ஏ. பி. பீரிஸ், எம். பி. ஹொஸ்வால், எஸ். பத்மநாதன், ஜே. எல். டி. பீரிஸ், டி. இ. எற்றியாராச்சி, கலாநிதி எல். எச். பெர்ஞன்டோ (அதிபர்), திரு பி. கணபதிப்பிள்ளை (பதில் செயலாளர்).

திரு ஜி. ஏ. எஸ். குணசிங்கா (அதிபரின் செயலாளர்) ஆகியவரும் பங்குபற்றினர்.

திரு தி. சி. ஏ. டி சொய்சா தாம் பங்குபற்றவியலாமைக்கு வருத்தம் தெரிவித்தார்.

1. 1968, அக்டோபர், 7ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை

திரு எஸ். பி. வைத்திலிங்கம் முன்மொழிய திரு ஜே. ஆர். சொமவில் வழிமொழிய 1968, அக்டோபர் 7ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. அறிக்கை சம்பந்தமான விடயம்

(அ) பக்கம் 1, விடயம் 2 (அ)—அக்கிரத்தன்னை உப-நிலையம்

அக்கிரத்தன்னை உப-நிலையக் குழுவிற்கு பின்வருவோர் நியமிக்கப் பட்டுள்ளனரென அறிவிக்கப்பட்டது :—

தலைவர், ஊவா தோட்டத்துரைமார்கள் சங்கம் (திரு ஜே. ஆர். சொமவில்)
ஊவாவிலுள்ள தே.ஆ.நி. சபை உறுப்பினர் (திரு ஜே. ஆர். சொமவில்) பதுளை, பண்டாரவளை ஆகிய இடங்களுக்கான
பரிசோதனை, தோட்டக் குழு உறுப்பினர்கள் (திரு சி. எப். புரூக்-சிமித், திரு டி. ஆர். மக்றெ)
எல்டெப் தோட்டத்தைச் சேர்ந்த திரு எம். எம். கிளாக ஊவா விஞ்ஞான உத்தியோகத்தர், திரு எல். எம். டி டபிள்யு. திலகரத்ன (செயலாளர்).

1. அக்கிரத்தன்னை உப-நிலையத்தை நிறுவுவதற்கு உதவிபுரிதல்
2. இந்நிலையத்தில் தேயிலையைப் பயிரிடுவதனுல் ஏற்படும் விளைவுகளை அறிந்து இவை கீழ் ஊவா மாகாணத் தோட்டங்களுக்கு எவ்வாறு பயன்படுமென ஆராய்வது.
3. நீர் வறட்சியினுல் பாதிக்கப்படும் ஊவாப் பகுதிகளில் பயிரிடப் படும் முளைவகைத் தேயிலையினுல் ஏற்படும் பிரச்சினைகளை, அதிபர், தே ஆ நி, பரிசோதனை தோட்டக்குழு ஆகியோருக்கு அவ்வப்போது அறிவிப்பது.

திரு கிளாக் அக்கிரத்தன்னை உப-நிலையத்தை மேற்பார்வையிட்டு அதன் செலவுகளுக்கு பொறுப்பாகவிருப்பார்; இந்நிலையத்தின் பிரச்சினைகளை தேஆநி அதிபருக்கும் ஊவா தோட்டத் துரைமார்கள் சங்கத்தின் உப-குழுவிற்கும் அவ்வப்போது தெரிவிப்பார், திரு கிளாக்கிற்கு வருடத்திற்கு ரூ 750 – வழங்கப்படும்.

(ஆ) பக்கம் 4, விடயம் 3—விசேட குழுவின் அறிக்கை

விசேட குழு ஆறு சிபாரிசுகளை செய்துள்ளதெனவும் இவற்றில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் அதிபர் கூறினர். சபையின் கூட்டங்கள் அடிக்கடி நடைபெற வேண்டுமெனவும் விசேட குழு சிபாரிசு செய்துள்ளது.

(இ) பக்கம் 5, விடயம் 5(அ)—பிரதான பரிபாலன உத்தியோகத்தர்

திரு பி. கணபதிப்பிள்ளை திரு ஏ. சி. பெரேராவின் வேலைகளை 1968, அக்டோபர் 16 தொடக்கம் 24ம் திகதிக்குள் பாரமேற்ருர். இரு பெயர்வழிக் கோப்புக்கள் காணப்படவில்லை. திரு ஏ. சி. பெரேரா நிலையத்திலிருந்து 1968, அக்டோபர், 24ம் திகதி விலகினர். அறுபத்து நாலு நாள் திரண்ட விடுமுறையைப் பயண்படுத்தாத விடத்து ரூ6,461/20 பணம் வழங்கப்படும். இளைப்பாறல் பணிக்கொடையாக ஆறுமாதச் சம்பளமும் படிகளுமாக (களியாட்டுப் படி நீங்கலாக) ரூ 13,329.60 வழங்கப்படவிருக்கிறது. முற்பணமாக ரூ 15,000/– ஏற்கனவே வழங்கப் பட்டுள்ளது.

திருவாளர்கள் டி. டபிள்யு. விக்கிரமரத்ன (இவரின் சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளது) என். சச்சிதானந்தம், உள்ளகக் கணக்குப் பரி சோதனை எழுதுவினைஞர், ஆகியோரின் பெயர்வழிக் கோப்புக்களே காணப்படவில்லை.

(உ) பக்கம் 8, விடயம் 8(ஆ)—தேயிலை சுவையாய்வோன்

ஓர் தேயிலை சுவையாய்வோனை 2 தொடக்கம் 3 வருட ஒப்பந்தத்தில் நியமிப்பதென சபை ஏகமனதாகத்தீர்மானித்தது.

3. சபையினதும் குழுக்களினதும் உறுப்புரிமை

(அ) சபை

திரு ஜி. பி. மிடில்டன் தனது நெட்டோய்வு முடிந்து 16.10.68 தொடக்கம் சபையில் தனது உறுப்புரிமையை வகிக்கிராரென அறிவிக்கப் பட்டது.

(ஆ) பரிசோதனை தோட்டக்குழு

(i) 7.10.68 தொடக்கம் திருவாளர்கள் ஜி. பி. மிடில்டன், ஜே. ஆர். சொமவில் ஆகியோர் இக்குழுவிற்கு சபையால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ii) 12.10.68 தொடக்கம் களுத்துறை மாவட்ட தோட்டத் துரைமார்கள் சங்கம் களுத்துறை மாவட்டப் பிரதிநிதியாக மத்துகமை, வோகன் குருப்பைச் சேர்ந்து திரு எச். ஜி. ஆர். டி மெல் என்பவரை நியமித்துள்ளது.

(iii) 1.8.68 தொடக்கம் தேயிலை கைத்தொழில் பிரதிநிதியாக திரு ஏ. டி. நீலிற்குப்பதிலாக போப்ஸ் அன் வாக்கரைச் சேர்ந்த திரு ஏ. சிற்றி கடமையாற்றுகிருர்.

தலைவர் ராஜினமாச் செய்துள்ள உறுப்பினர்களுக்கு நன்றி தெரி வித்து புதிய உறுப்பினர்களை வரவேற்ருர்.

(இ) பரிசோதனை தோட்ட உப-குழு

7.10.68 தொடக்கம் உப-குழுவிற்கு பின்வருவோர் உடன் சேர்க் கப்பட்டுள்ளனர்.

திரு எஸ். ஜி. சல்காடோ
திரு பி. வருசவிதான
திரு ஜி. பி. மிடில்டன்

பரிசோதனை தோட்ட உப-குழுவில் திருவாளர்கள் பி. ஜே. சி. டறண்ட், எஸ். ஜி. சல்காடோ, பி. வருசவிதான, ஜி. பி. மிடில்டன், கலாநிதி எல் எச். பெர்னுன்டோ ஆகியோர் கடமையாற்றுகின்றனர். இந்த உப-குழு செலவுகள் யாவற்றையும் கண்காணித்து உப-நிலையங்களின் முன்னேற்றத்தைக் கவனிக்கும்.

இந்த உப-குழுவிற்கு திரு எஸ். பி. வைத்திலிங்கத்தை உடன் சேர்க்க வேண்டுமென சபை தீர்மானித்தது.

4. <u>1968, நவம்பர், 7ம் திகதி நடைபெற்ற நிருவாகக் குழுக்கூட்டத்தின் அறிக்கை</u>

<u>(ஆ) பக்கம் 2, விடயம் (உ) தே.ஆ.நி. உத்தியோகத்தர் சேமநிதி</u>

நிலையத்தில் 5 வருட கால சேவையை முடித்த உத்தியோகத்தர்கள் தமது சேமநிதியிலிருந்து 75% பணத்தைப் பெற்றுக்கொள்ளலாமென்றும் திருத்தத்தை தொழில் ஆணையாளர் அங்கீகரித்துள்ளாரென பதில் பிரதான பரிபாலன உத்தியோகத்தர் குறினுர். இப்பிரச்சினை அக்டோபர், 24ம் திகதி நடைபெற்ற நிருவாகக் குழுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது; இதன் பயனுக உறுப்பினர்களுக்கு காணி அல்லது வீடு கொள்வனவு செய்வதற்கு அல்லது வீடு கட்டுவதற்கு கடன் 6% வட்டியில் வழங்கப்படுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இப்பணத்தை சேமநிதியிருந்து திருப்பிச் செலுத்தாமல் பெறுவதற்கு குழு சம்மதிக்கவில்லை.

திரு ஜே. எப். ஏ. பி. பீரிஸ் முன்மொழிய திரு ஜே. ஆர். சொமவில் வழிமொழிய 1968, நவம்பர், 7ம் திகதி நடைபெற்ற நிருவாகக் குழுக்கூட்டத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5. <u>1968, அக்டோபர் 22ம் திகதி நடைபெற்ற கட்டடக் குழுக் கூட்டத்தின் அறிக்கை</u>

(ஆ) <u>பக்கம் 3, விடயம் 5—1969ம் ஆண்டுக்கான கட்டடங்கள்</u>

1969ம் ஆண்டுக்கான மதிப்பீட்டில் சென்ற் ஜோக்கிம் தோட்டத்தில் இரு வங்களாக்களைக் கட்டுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(இ) <u>பக்கம் 3, விடயம் 6 (இ)—சென்ற் கூம்ஸ் தோட்டத்தை வந்தடையும் வீதி</u>

சென்ற் கூம்ஸ் தோட்டத்தை வந்தடையும் வீதி விரைவில் விஸ்தரிக்கப்படும்.

திரு ஜே. எல். டி. பீரிஸ் முன்மொழிய திரு எஸ். பி. வைத்திலிங்கம் வழிமொழிய இவ்வறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7. <u>வேறு விடயம்</u>

(அ) <u>ராஜினுமாக்கள், இளைப்பாறல், முதலியன</u>

(i) கலாநிதி ஏ. எஸ். எல். திருமான, உயிரினவிரசாயனவறிஞன் (சுவை ஆராய்ச்சி), 31.10.68 தொடக்கம்.
(ii) திரு கே. சி. டபிள்யு. எம். ஏ. சந்திரசேகரா, பரிசோதனைச் சாலை பணிப்பாளர், 2.10.68 தொடக்கம்

<u>சேவையை ரத்துச்செய்தவர்</u>

திரு டி. டபிள்யு. விக்கிரமரத்ன, கணக்கு எழுதுவினைஞர், 17.10.68 தொடக்கம்

இளைப்பாறல்

திரு ஏ. சி. பெரேரா, பிரதான பரிபாலன உத்தியோகத்தர், 31.10.68 தொடக்கம்

(ஆ) வெளிநாட்டு மேற்படிப்புப் பயிற்சியிலிருந்து திரும்பியவர்கள்

(i) கலாநிதி என். சண்முகநாதன், தாவர நோயியலறிஞன், 2.10.68 ல் இலங்கையை வந்தடைந்தார்.

(ii) கலாநிதி ஆர். ஆர். செல்வேந்திரன், ஆராய்ச்சி உத்தியோகத்தர், உயிரினவிரசாயனப் பிரிவு, தனது மேற்படிப்புப் பயிற்சியை முடித்துக்கொண்டு 23.10.68ல் இலங்கையை வந்தடைந்தார்.

(iii) திரு கே. சிவபாலன், நுண்தொழில் உதவியாளர், உயிரின விரசாயனப் பிரிவு, 2 வருட கால படிப்பு விடுமுறை முடிந்ததும் 15.10.69ல் இலங்கையை வந்தடைந்தார்.

(iv) திரு ஏ. ஆர். செபஸ்ரியம்பிள்ளை, ஆராய்ச்சி உதவியாளர், தாவர இனப்பெருக்கல் பிரிவு—திரு செபஸ்ரியம்பிள்ளை தனது ஆராய்ச்சிக் கட்டுரையை முடிப்பதற்கு 1969, மார்ச் மாதம் வரை 3 மாத கால நீடிப்பை சபை அங்கீகரித்துள்ளது.

கூட்டம் மு.ப. 11.45 மணிக்கு முடிவடைந்தது.

பி. கணபதிப்பிள்ளை
பதில் செயலாளர்.

## கொழும்பு, இலங்கை தோட்டத்துரைமார்கள் சங்கத்தின் டளிங்கு ஞாபகக் கூடத்தில் 1968, டிசெம்பர், 15ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலே 9.00 மணிக்கு நடைபெற்ற இலங்கை தேயிலே ஆராய்ச்சி நிலேயச் சபைக் கூட்டத்தின் அறிக்கையின் சுருக்கம்.

பங்குபற்றியவர்கள்—திருவாளர்கள் எப். அமரசூரியா (தலேவர்), எம். எஸ். பெரேரா, பி. வருசவிதான, எஸ். கே. டி. ஜயமான, தி. சி. ஏ. டி சொய்சா, எஸ். பி. வைத்திலிங்கம், ஜே. ஆர். சொமவில், ஜி. பி. மிடில்டன்; ஜே. எப். ஏ. பி. பீரிஸ், எம். பி. ஹொஸ்வால், எஸ். பத்மநாதன், ஜே. எல். டி. பீரிஸ், டி. இ. எற்றியாராச்சி எம், இராஜேந்திரம், கலாநிதி எல். எச். பெர்ஞன்டோ (அதிபர்) திரு பி. கணபதிப்பிள்ளே (பதில் செயலாளர்).

திரு ஜி. ஏ. எஸ். குணசிங்கா (அதிபரின் செயலாளர்) ஆகியவரும் பங்கு பற்றினர்.

திரு சி. பி. சண்முகம் தாம் பங்குபற்ற வியலாமைக்கு வருத்தம் தெரிவித்தார்.

### 1. 1968, நவம்பர், 25ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் அறிக்கை

இந்த அறிக்கையில் அனேக விபரங்கள் தரப்பட்டுள்ளனவென்றும் இதன் சுருக்கத்தை அளிக்குமாறு திரு சொமவில் கூறினர். சபையின் நடவடிக்கைகளே சுருக்கமாகப் பதிவு செய்வதென சபை தீர்மானித்தது.

திரு எஸ். பத்மநாதன் முன்மொழிய திரு ஜே. ஆர். சொமவில் வழிமொழிய 1968, நவம்பர் 25ம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### 3. 1968, நவம்பர், 24ம் திகதி நடைபெற்ற நிருவாகக் குழுக் கூட்டத்தின் அறிக்கை

திரு எஸ். பி. வைத்திலிங்கம் முன்மொழிய திரு ஜே. எல். டி. பீரிஸ் வழிமொழிய 1968, நவம்பர், 24ம் திகதி நடைபெற்ற நிருவாகக் குழுக்கூட்டத்தின் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### 4. 1968ம் ஆண்டுக்கான மதிப்பீடு

பின்வரும் விடயங்களே சபை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டது:—

(i) 1969ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடு (பத்திரம் 1968/149— A. 39)

(ii) 1969ம் ஆண்டுக்கான பணச் சுருக்கத் திரட்டு (பத்திரம் 1968/156— B. 57)

(iii) 30/9/68 வரை செலவுகளின் விபரக் கூற்று (பத்திரம், 1968/160— B. 59)

(iv) தோட்ட மூலதனச் செலவின் விபரக்கூற்று

(v) 1969ம் ஆண்டுக்கான சென்ற் கூம்ஸ் தோட்ட மதிப்பீடு (பத்திரம் 1968/131— E. 39)

(vi) 1969ம் ஆண்டுக்கான சென்ற் ஜோக்கிம் தோட்ட மதிப்பீடு (பத்திரம் 1968/132— E. 40)

மதிப்பீடுகளே நிருவாகக் குழு பரிசீலனே செய்தபின் பின்வரும் மூன்று விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளனவென அதிபர் கூறினர்:—

(அ) சிற்றுயிரியல் பிரிவுக்கு ரூ 15,000/– செலவில் ஓர் தற்றிறக் குங்கருவி (இதன் அரைச் செலவை சிறுதுளே வண்டுத் திட்டத்தின் ஐக்கிய அமெரிக்க நிதி உதவி அளிக்கும்).

(ஆ) நெமற்ரேடியல் பிரிவுக்கு ரூ 2500/– செலவில் கனலடுப்பு.

(இ) நூல்நிலையத்திற்கு ரூ 2000 – செலவில் தளபாடங்களும், தளத்துணிகளும்.

திரு ஜே. ஆர். சொமவில் முன்மொழிய திரு ஜே. எப். ஏ. பீ. பீரிஸ் வழிமொழிய தே.ஆ.நி. மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டன.

திரு ஜே. ஆர். சொமவில் முன்மொழிய திரு ஜி. பி. மிடில்டன் வழிமொழிய சென்ற் ஜோக்கிம் தோட்ட மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டன.

6. <u>உத்தியோகத்தர் விடயம்</u>
<u>திரு டி. டபிள்யு. விக்கிரமரத்ன</u>

திரு விக்கிரமரத்னவின் பிரச்சினை சம்பந்தமாகத் தான் நடத்திய விசாரணையின் முடிவுகளை பதில் பிரதான பரிபாலன உத்தியோகத்தர் சபைக்கு அறிவித்தார். அவர் திரு விக்கிரமரத்ன சபைக்குச் செய்த மேன்முறையீட்டையும் குறிப்பிட்டார். இவ் விடயத்தை விவாதித்த பின் திரு விக்கிரமரத்னவின் சேவைகளை ரத்துச்செய்வது என்றும் அதிபரின் தீர்மானத்தை சபை அங்கீகரித்தது.

பச்சிலை உற்பத்திக்காக வழிகாட்டி இயந்திரமொன்றை நிறுவுவதற்காக ரூ 15,000 – அங்கீகரிக்கப்பட்டது; இத்திட்டத்தை மேற்கொண்டு நடத்துவதற்கு தொழின்முறையியலறிஞனுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

(உ) <u>இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே நடைபெற்ற வியாபாரத் தொழில், பொருளாதாரக் கூட்டுறவு, தேயிலை ஆகியன சம்பந்தமான பேச்சுவார்த்தைகள்</u>

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் அறிக்கை கவனிக்கப்பட்டது.

(ஊ) தலைவர் சபை உறுப்பினர்களுக்கு நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தனது பதவிக்காலம் 1969, மார்ச் 26ம் திகதியுடன் முடிவடைகிறதெனவும் சபைத் தலைவர் பதவியிலிருந்தும் சபை உறுப்புரிமையிலிருந்தும் தான் உடனடியாக ராஜினமாச் செய்கிருரெனவும் தலைவர் கூறிஞர். கடந்த 12 வருட கால மாகத் தலைவராக இருந்த காலத்தில் தனக்கு உவந்தளித்த ஒத்துழைப்பிற்கு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

தலைவர் தேயிலை ஆராய்ச்சி நிலையத்திற்கு அளப்பரிய சேவை செய்துள்ளாரென திரு சொமவில் கூறிஞர். தே.ஆ.நி. யின் புகழ் கடந்த 12 வருட காலமாகத் தலைவர் ஆற்றிய சேவையின் பயனுகும். திரு அமரசூரியாவிற்குப் பதிலாக திரு ஜே. எப். ஏ. பி. பீரிஸ்சை சபைத் தலைவராக முன்மொழிந்தார்.

1969, ஜனவரி, 9ம் திகதி நடைபெறவிருக்கும் கூட்டத்தில் புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவாரெனத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் பி.ப. 12.10 மணிக்கு முடிவடைந்தது.

பி. கணபதிப்பிள்ளை
பதில் செயலாளர்.

போட், ரேட்ஸ், தோண்டன் அன் கம்பனி

அந்தரங்கமானதும் நம்பிக்கையானதும்

கொழும்பு,
10, டிசெம்பர், 1969.

கணக்குப் பரிசோதகர் தலைமை அதிபர்,
கணக்குப் பரிசோதனைக் காரியாலயம்,
கொழும்பு.

ஐயா,

